**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா.1** **Date : 13.06.2024**

| Name : சுதாகர் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused others present. ) (Accused 1, 2, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. நான் டோல்கேட்டில் வேலை செய்வதால் எனது பணி நேரம் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை ஆகும். எதிரிக்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு துாரம என்றால் 20 அடி இருக்கும். எனது வீட்டிற்கும் கந்தசாமி வீட்டிற்கும் எவ்வளவு துாரம் என்றால் 3 அடி துாரம் இருக்கும். கந்தசாமி என்பவருக்கு குடி பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. 2013 ம் ஆண்டில் எதிரிகள் கந்த சாமி மீது வழக்கு கொடுத்து குற்ற எண். 284–2013 என்ற எண்ணில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம்.

2. என் மீது இதே மேச்சேரி காவல் நிலையத்தில் குற்ற எண். 820–2020 என்ற எண்ணில் 07.09.2020 ம் தேதியன்று வழக்கு பதிவு செய்து இதே சம்பவம் தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் அத்துமீறி கந்த சாமி வீட்டிற்கு புகுந்தததது குறித்த கதவை உடைத்து உள்ளே சென்றார்களா என்றால் இல்லை. சொல்லாமல் உள்ளே சென்று விட்டார்கள்.

3. வேல்முருகன் கந்தசாமியை தலையில் கத்தியால் வெட்டியது குறித்த எந்தவகையான கத்தி என்றால் வீச்சு அரிவாள் ஆகும். கத்தி குறித்து நான் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. என்னை

வெட்டியதால் என்னால் ஒப்படைக்கமுடியவில்லை. காவல்துறையினர் கத்தி குறித்து விசாரித்தார்களா என்றால் அது பற்றி கேட்கவில்லை. மகேந்திரன் என்பவர் கந்தசாமி அவர்களை தலையில் வெட்டியது குறித்து எந்த வகையான கத்தி என்றால் ஒரே வீச்சு அரிவாள் ஆகும். என்னை வெட்டியதால் என்னால் ஒப்படைக்கமுடியவில்லை. காவல்துறையினர் கத்தி குறித்து விசாரித்தார்களா என்றால் அது பற்றி கேட்கவில்லை.

4. எதிரி மோகனகண்ணன் கலைகொத்து குறித்து காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் அது பற்றி கேட்கவில்லை. எந்த வகையான கட்டை என்றால் மண்வெட்டியின் கைப்பிடி ஆகும். இது குறித்து காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் அது பற்றி கேட்கவில்லை. எனது அண்ணியின் சத்தம் கேட்டு தான் சம்பவம் இடம் சென்றது குறித்து மணி, மோகனகண்ணன், மகேந்திரன், வேல்முருகன் ஆகியோர்கள் கந்தசாமியை நேரடியாக தாக்கினார்கள் என்பது குறித்து நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை.எனது அண்ணி தான் சொன்னார்கள்.

5. எதிரி மணி என்பவர் கட்டையால் என்னுடைய தலை முன்பகுதி தாக்கியது குறித்து என்ன வகையான கட்டை என்றால் மண்வெட்டியின் கைப்பிடி ஆகும். இது குறித்து காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் அது பற்றி கேட்கவில்லை. என்னை மோகன கண்னன் வலது கெண்டைகையில் வெட்டி கத்தி என்ன வகையானது என்றால் வீச்சு அருவாள் ஆகும். இது குறித்து காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் அது பற்றி கேட்கவில்லை. வேல்முருகன் என்னுடைய கையை கத்தியால் தாக்கினார் என்றால் எந்த வகையான கத்தி என்றால் வீச்சு அருவாள் ஆகும். இது குறித்து காவல்துறையினர் விசாரித்தார்களா என்றால் அது பற்றி கேட்கவில்லை. எனக்கு மயக்கம் ஏற்பட்டதா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் நான் தெளிவாக இருந்தேன் என்றால் ஆமாம்.

6. அதே போல் என்னுடைய தாயார் சுலோசனா என்பவரை இடது பக்க காதில் அடிததது குறித்து நான் அவரை காப்பாற்ற முயன்றேனா என்றால் என்னை

அடித்ததால் காப்பாற்ற முடியவில்லை. சாந்தியை அடிக்கும் சத்தம் கேட்டு வந்தேனா என்றால் சாந்தியை அடிக்கும் போது நான் வந்துவிட்டேன். எதிரிகள் என்ன வகையான காரில் ஏறி என்றால் சுமோ வடிவிலான கார் ஆகும்.

7. 20 அடி துாரத்தில் உள்ள எதிரிகள் காரில் சென்ற நிலையில், காவல் துறையினர் காரினை பறிமுதல் செய்தார்களா என்றால் இல்லை. சிகச்சைக்காக முதலில் எந்த மருத்தவமனைக்கு சென்றேன் என்றால் ஓமலூர் மருத்தவமனைக்கு சென்றேன். அங்கு எவ்வளவு இருந்தேன் என்றால் 1 மணி நேரம் இருந்தேன். அதன் பிறகு காவல் துறையினர் சம்பவம் குறித்து என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை.

8. 2013ம் ஆண்டில் எதிரிக்கும் கந்தசாமி என்பவருக்கும் முன்விரோதம் இருந்ததது என்றால் சரிதான். அதன்பின்னிட்டு முன்விரோதம் இல்லை என்றால் சரிதான். கந்தசாமிக்கும் அடிக்கடி குடிபழக்கம் இருந்த வந்த காரணத்தால் மேற்படி எதிரியானவர் தேவையில்லாத சண்டை சச்சரவுகளை தொடாச்ச்யாக ஈடுபட்டு வந்துள்ளார் என்றால் சரியல்ல. அது குறித்து மேற்படி காவல் நிலையத்தாரிடம் புகார் அளிக்கபட்டு பலமுறை சமரசம் செய்து வைத்தள்ளார்கள் என்றால் சரியல்ல.

9. எதிரிகளுக்கும் எனது வீட்டிற்கும் கூரை தண்ணீர் சுவற்றின் மீது விழும் படி பைப் போட்டிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன பைப் பொது இடத்தில் வைக்கப்பட்டிருந்ததது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததை அண்ணி சாந்தியின் சத்தத்தை கேட்டு வந்த பிறகு அவர் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரை யாரை தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நேரடியாக எதிரிகள் யாரை தாக்கினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் எனது அண்ணன் கந்த சாமி அடித்ததை மட்டுமே நேரடியாக பார்க்கவில்லை, மற்றவர்களை அடித்ததை நான் நேரடியாக பார்த்தேன். எதிரிகள் கத்தி கட்டை, கலைகொத்து போன்றவற்றை கொண்டு தாக்கினார் என்பது பொய் என்றால் சரியல்ல.

10. குற்ற எண். 820-2020 ன் படி நான் அந்த வழக்கில் எதிரியாக இருந்து ,

இந்த வழக்கின் எதிரிகளை கொடுர மான முறையில் நானும் என்னுடன் இருந்தவர்களும் தாக்கியுள்ளிர்கள் என்றால் சரியல்ல. என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி இதுவரையில் என் மீது போடபட்ட வழக்கை நீதிமன்றத்திற்கு இது நாள் வரையில் பார்த்துகொண்டிர்கள் என்றால் சரியல்ல. நானும் எனது அண்ணன் ஆகியோர் சேர்ந்து ஏற்கனவே எதிரிகள் மீது இருந்த முன்விரோத்தின் காரணமாக ஆயுத்ததை கொண்டு எதிரிகளை தாக்க முற்பட்ட போது நானும் எதிரிகளும் உறவினர்கள் என்பதால் அப்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டத்தில் எங்களுக்குள் தாக்குதல் நடத்தி கொண்ட போது தவறுதலாக தாங்களுக்குள்ளே தாக்கி கொண்டீர்கள் என்றால் இல்லை.

11. மேலும், எதிரிகளை அயுதம் கொண்டு கடுமையாக தாக்கி எதிரிகளுக்கு வெட்டுகாயம் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகச்சை பெற்று அது குறித்தான காவல் துறையினர் விசாரணைபடி வழக்கு பதியபட்டுள்ளது என்றால் பொய் வழக்காகும்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா.2** **Date : 13.06.2024**

| | |
|---|---|
| **Name : கந்தசாமி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 1, 2, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1. எதிரிகள் எங்களுக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். தண்ணீர் பைப் போட்டது சம்பந்தமாக பிரச்சனை வந்தது குறித்து அந்த பைப் பொது இடத்தில் போடபட்டுள்ளது என்றால் என்னுடைய இடத்தில் போடபட்டுள்ளது.இது சம்பந்தமாக பிரச்சனை உள்ள நிலையில், எங்கள் இடத்தில் பைப் உள்ள நிலையில் பைப் உடைத்த நிலையில் என்னுடைய இடத்தில் உள்ள போது ஏன்காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. கடந்த 2013ம் ஆண்டு இதே பிரச்சனை சம்பந்தமாக எதிரிகள் எங்கள் மீது மேச்சேரியில் காவல் நிலையத்தில் எதற்காக புகார் கொடுத்தார்கள் என்றால் இதே பைப் சம்பந்தபட்ட பிரச்சனைக்காக கொடுத்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கும் சுலோச்சனை வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 5–6 அடி தூரம் இருக்கும். என்னுடைய வீட்டிற்கும் மணி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரு வீடு தள்ளி உள்ளது. என்னுடைய வீட்டிற்கும் கோவிந்தராஜ் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 5–6 வீடு தள்ளி உள்ளது

என்றால் ஆமாம். என்னுடைய வீட்டிற்கும் மோகன்கண்னன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுலோச்சனா வீட்டை தாண்டி உள்ளது.

3. எதிரி மகேந்திரன் வீடு எனது வீட்டிலிருந்து 5–6 வீடு தள்ளி உள்ளது என்றால் சரிதான். வேல்முருகன் வீடு எனது வீட்டிற்கு தாண்டி 4–5 அடி தள்ளி உள்ளது. எதிரிகள் வீடுகளை தவிர எனது வீட்டை சுற்றி எத்தனை வீடு உள்ளது என்றால் 100 வீடுகள் உள்ளது. அடாத்தியாக வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்குள் கதவினை உடைத்து விட்டு உள்ளே எதிரிகள் வந்தார்களா என்றால் நான் சாப்பிட்ட போது சொல்லாமல் உள்ளே வந்தார்கள்.

4. எதிரிகள் கத்தியால் வெட்டிய போது எனக்கு மயக்கம் ஏற்பட்டதா என்றால் அமாம். நான் கீழே விழுந்து விட்டேன். பிறகு எனக்கு முழுமையாக ஒன்றும் தெரியாது என்றால் அரை மயக்கத்தில் இருந்தேன். எத்தனை கத்தியால் வெட்டினார்கள் என்றால் 2 வகையான கத்தியால் வெட்டினார்கள், ஒன்று வீச்சு கத்தி, கலைகொத்து ஒன்றாகும். இதனை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. அதன் பிறகு எந்த தேதியில் கத்தி குறித்து விசாரித்தார்களா என்றால் இல்லை.

5. எனது மனைவியை எதிரிகள் கட்டையால் தாக்கியது குறித்து எத்தனை கட்டை என்றால் அது பற்றி எத்தனை கட்டை என தெரியாது. சம்பவத்திற்கு பிறகு எந்த மருத்துவமனையில் சிகச்சை பெற்றேன் என்றால் முதலில் ஒமலூர் மருத்துவமனையில் 2 மணி நேரம் முதலுதவி சிகச்சை பெற்றேன். சேலம் அரசு மருத்தவமனையில் எத்தனை நாள் சிகச்சைபெற்றேன் என்றால் 2 நாள் சிகச்சை பெற்றேன். சேலம் அரசு மருத்துவமனையில் நான் மது அருந்தியாக சான்று உள்ளது என்றால் நான் குடிக்கவே இல்லை.

6. எதிரிகள் என் மீது வழக்கு போட்டுள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு அதிகமான மது குடிக்கும் பழக்கம் உள்ளதால் அடிக்கடி எதிரிகளிடம் வீடு சம்பந்தபட்ட பிரச்சனைக்காகவும், பைப் போட்டது தொடர்பாக பிரச்சனை இருந்து வந்த காரணத்தால் எதிரிகளிடம் குடி போதையில் சண்டைபோட்டு வந்துள்ளேன் என்றால் இல்லை.

7. எதிரிகளை நான் மற்றும் எனது சகாக்கள் சேர்ந்து தாக்கியது தொடர்பாக மேச்சேரி காவல் நிலைய குற்ற வழக்கு எண். 820-2020 ன் படி கத்தி கட்டை போன்ற ஆயுத்ததை கொண்டு கடுமையாக தாக்கி வெட்டு காயம், எலும்பு முறிவு அகியவற்றை ஏற்படுத்தியது தொடர்பான வழக்கு இது வரையில் நீதிமன்றத்திற்கு இது நாள் வரையில் வாரமல் பார்த்துகொண்டிர்கள் என்றால் சரியல்ல. நானும் எனது தம்பியும் ஆகியோர் சேர்ந்து ஏற்கனவே எதிரிகள் மீது இருந்த முன்விரோத்தின் காரணமாக ஆயுத்ததை கொண்டு எதிரிகளை தாக்க முற்பட்ட போது நானும் எதிரிகளும் உறவினர்கள் என்பதால் அப்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டத்தில் எங்களுக்குள் தாக்குதல் நடத்தி கொண்ட போது தவறுதலாக தாங்களுக்குள்ளே தாக்கி கொண்டு காயம் ஏற்படுத்திகொண்டீர்கள் என்றால் இல்லை.

8. மேலும், எதிரிகளை அயுதம் கொண்டு கடுமையாக தாக்கி எதிரிகளுக்கு வெட்டுகாயம் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகச்சை பெற்று அது குறித்தான காவல் துறையினர் விசாரணைபடி வழக்கு பதியபட்டுள்ளது என்றால் பொய் வழக்காகும். எதிரிகள் என்னையும் எனது வகையறாக்களையும் கத்தியால் தாக்கியதாக கூறிவிட்டு அயுதங்களை காவல் துறையில் ஒப்படைக்க வில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் சென்ற காரினை கைப்பற்றி காவல் துறையில் ஒப்படைக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா.3** **Date : 13.06.2024**

| | |
|---|---|
| **Name : சாந்தி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 1, 2, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எதிரிகள் எங்களுக்கு நெருங்கிய உறவினர் என்றால் பங்காளிமுறையாகும். எனது வீட்டிற்குள் கதவினை உடைத்து விட்டு உள்ளே எதிரிகள் வந்தார்களா என்றால் நான் சாப்பிட்ட போது சொல்லாமல் உள்ளே வந்தார்கள். எதிரிகள் வீடுகளை தவிர எனது வீட்டை சுற்றி எத்தனை வீடு உள்ளது என்றால் 100 வீடுகள் உள்ளது. எதிரிகள் கத்தியால், கட்டையாலும் எனது கணவரை வெட்டிய போது அனைவரும் ஒன்றாக தாக்கினார்களா என்றால் சரிதான். எனது கணவரை எந்த வகையான கத்தியால் வெட்டினார்கள் என்றால் நான் ரத்ததை பார்த்தால் மயக்கமடைந்தேன். கத்தியை பார்க்கவில்லை. எனக்கு மயக்க ஏற்பட்ட பிறகு அதன் பிறகு எனக்கு என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. நான் கத்தில் இருந்தேன். எத்தனை கத்தியால் வெட்டினார்கள் என்றால் 2 வகையான கத்தியால் வெட்டினார்கள், ஒன்று வீச்சு கத்தி, கலைகொத்து ஒன்றாகும். இதனை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. அதன் பிறகு எந்த தேதியில் கத்தி குறித்து விசாரித்தார்களா என்றால் இல்லை. ஒமலூர் மருத்துவமனையில் எத்தனை நாள் இருந்தேன் என்றால் ஒரு மணி நேரம் இருந்தோம்.

3. கடந்த 2013ம் ஆண்டு இதே பிரச்சனை சம்பந்தமாக எதிரிகள் எங்கள் மீது மேச்சேரியில் காவல் நிலையத்தில் எதற்காக புகார் கொடுத்தார்கள் என்றால் இதே பைப் சம்பந்தபட்ட பிரச்சனைக்காக கொடுத்தார்கள் என்றால் சரிதான். பைப் சம்பந்தமாக

பிரச்சனை இது நாள்வரையில் உள்ளது என்றால் இல்லை. எதிரிகள் எங்கள் மீது வழக்கு போட்டுள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்திற்கு பிறகு சேலம் அரசு மருத்துவமனையில் எனது கணவர் மது அருந்தியாக சான்று உள்ளது என்றால் மது போதையில் இல்லை.

4. எதிரிகளை நான் மற்றும் எனது சகாக்கள் சேர்ந்து தாக்கியது தொடர்பாக மேச்சேரி காவல் நிலைய குற்ற வழக்கு எண். 820-2020ன் படி கத்தி கட்டை போன்ற ஆயுத்ததை கொண்டு கடுமையாக தாக்கி வெட்டு காயம், எலும்பு முறிவு அகியவற்றை ஏற்படுத்தியது தொடர்பான வழக்கு இது வரையில் நீதிமன்றத்திற்கு வாரமல் பார்த்துகொண்டோம் என்றால் சரியல்ல. நானும் எனது கணவர்,கணவரின் தம்பி ஆகியோர் சேர்ந்து ஏற்கனவே எதிரிகள் மீது இருந்த முன்விரோத்தின் காரணமாக ஆயுத்ததை கொண்டு எதிரிகளை தாக்க முற்பட்ட போது நானும் எதிரிகளும் உறவினர்கள் என்பதால் அப்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டத்தில் எங்களுக்குள் தாக்குதல் நடத்தி கொண்ட போது தவறுதலாக தாங்களுக்குள்ளே தாக்கி கொண்டு காயம் ஏற்படுத்திகொண்டீர்கள் என்றால் இல்லை.

5. மேலும், எதிரிகளை அயுதம் கொண்டு கடுமையாக தாக்கி எதிரிகளுக்கு வெட்டுகாயம் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகச்சை பெற்று அது குறித்தான காவல் துறையினர் விசாரணைபடி வழக்கு பதியபட்டுள்ளது என்றால் பொய் வழக்காகும். எதிரிகள் என்னையும் எனது வகையறாக்களையும் கத்தியால் தாக்கியதாக கூறிவிட்டு அயுதங்களை காவல் துறையில் ஒப்படைக்க வில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் சென்ற காரினை கைப்பற்றி காவல் துறையில் ஒப்படைக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா.4** **Date : 13.06.2024**

| | |
|---|---|
| **Name : பெரியஅக்கா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 1, 2, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

1. எதிரிகள் எங்களுக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான்.எங்களுக்கும் எதிரிக்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்ததது என்றால் ஆமாம். ஆனால் இந்த பிரச்சனை வேறாகும். எனது காதில் எதை கொண்டு அடித்தார்கள் என்றால் கட்டையை கொண்டு அடித்தார்கள். அந்த கட்டையை காவல் துறையில் கொடுத்தேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் கட்டை குறித்து விசாரிக்கவில்லை.

2. கோவிந்தன் என்பவர் என்னை தடியால் அடித்தார்களா என்றால் யார் அடித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளை நான் மற்றும் எனது சகாக்கள் சேர்ந்து தாக்கியது தொடர்பாக மேச்சேரி காவல் நிலைய குற்ற வழக்கு எண். 820–2020ன் வழக்கு உள்ளது என்றால் சரிதான். எனது மகனுக்கு குடிபழக்கம் உள்ளதா என்றால் இல்லை. ஒமலூர் மருத்தவமனையில் எத்தனை நாள் இருந்தேன் என்றால் எனக்கு தெரியவில்லை.

3. எனது மகன் வீட்டிற்குள் கதவினை உடைத்து விட்டு உள்ளே எதிரிகள் வந்தார்களா என்றால் அவர் சாப்பிட்ட போது சொல்லாமல் உள்ளே வந்தார்கள். எதிரிகள் வீடுகளை தவிர எங்களது வீட்டை சுற்றி எத்தனை வீடு உள்ளது

என்றால் 100 வீடுகள் உள்ளது.

4. எதிரிகளை நான் மற்றும் எனது சகாக்கள் சேர்ந்து தாக்கியது தொடர்பாக மேச்சேரி காவல் நிலைய குற்ற வழக்கு எண். 820-2020ன் படி கத்தி கட்டை போன்ற ஆயுத்ததை கொண்டு கடுமையாக தாக்கி வெட்டு காயம், எலும்பு முறிவு அகியவற்றை ஏற்படுத்தியது தொடர்பான வழக்கு இது வரையில் நீதிமன்றத்திற்கு வாரமல் பார்த்துகொண்டோம் என்றால் சரியல்ல. நானும் எனது மகன்கள் ஆகியோர் சேர்ந்து ஏற்கனவே எதிரிகள் மீது இருந்த முன்விரோத்தின் காரணமாக ஆயுத்ததை கொண்டு எதிரிகளை தாக்க முற்பட்ட போது நானும் எதிரிகளும் உறவினர்கள் என்பதால் அப்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டத்தில் எங்களுக்குள் தாக்குதல் நடத்தி கொண்ட போது தவறுதலாக தாங்களுக்குள்ளே தாக்கி கொண்டு காயம் ஏற்படுத்திகொண்டீர்கள் என்றால் இல்லை.

5. மேலும், எதிரிகளை அயுதம் கொண்டு கடுமையாக தாக்கி எதிரிகளுக்கு வெட்டுகாயம் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகச்சை பெற்று அது குறித்தான காவல் துறையினர் விசாரணைபடி வழக்கு பதியபட்டுள்ளது என்றால் பொய் வழக்காகும். எதிரிகள் என்னையும் எனது வகையறாக்களையும் கத்தியால் தாக்கியதாக கூறிவிட்டு அயுதங்களை காவல் துறையில் ஒப்படைக்க வில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா.5** **Date : 13.06.2024**

| | |
|---|---|
| **Name :** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 1, 2, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எதிரிகள் எங்களுக்கு நெருங்கிய உறவினர் என்றால் இல்லை. கந்தசாமி எனது மச்சாண்டார் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் எதிரி மகேந்திரன் வீடு எனது வீட்டிலிருந்து ஒட்டிவாறு உள்ளது. வேல்முருகன் வீடு எனது வீட்டிற்கு தாண்டி எங்கு உள்ளது என்றால் 10 வீடு தள்ளி உள்ளது. மோகன் கண்ணன் வீடு பத்து வீடு தள்ளி உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் வீடுகளை தவிர எனது வீட்டை சுற்றி எத்தனை வீடு உள்ளது என்றால் 50 வீடுகள் உள்ளது. கடப்பாறையால் தாக்கிய போது எலும்பு முறிவு ஏற்பட்டதா என்றால் இல்லை. கடப்பாறை எவ்வளவு பெரியது என்றால் பெரிய கடப்பாறை ஆகும்.

2. எதிரிகள் யாரை யார் அடித்தார்கள் என்றால் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. இந்த பிரச்சனை சம்பந்தமாக கந்தசாமி, சதாசிவம் ஆகியோர் மீது வழக்கு பதியபட்டுள்ளது என்றால் ஆமாம். கடந்த 2013ம் வருடம் கந்தசாமி மீது எதிரிகள் வழக்கு கொடுத்துள்ளது தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கும் பைப் சம்பந்தமாக பிரச்சனை என்றால் இல்லை.

3. என்னை கடப்பாறை அடித்தது சம்பந்தமாக கடப்பாறையை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் எதிரிகள் எடுத்து சென்று விட்டார்கள்.

காவல்துறையினர் இது சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் கடப்பாறை குறித்து விசாரிக்கவில்லை. எதிரிகள் என்ன வகையான காரில் தப்பித்து சென்றார்கள் குறித்து கார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. காரினை பறிமுதல் செய்யசொல்லி நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

4. எனது மச்சாண்டார் அவர்களுக்கு குடிபழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. ஓமலூர் மருத்தவமனையில் எத்தனை நாள் இருந்தேன் என்றால் உடனடியாக சேலத்திற்கு சென்றுவிட்டோம். சேலத்தில் எத்தனை நாள் சிகச்சை பெற்றேன் என்றால் 2 நாள் சிகச்சை பெற்றேன். எதிரிகளை நான் மற்றும் எனது சகாக்கள் சேர்ந்து தாக்கியது தொடர்பாக மேச்சேரி காவல் நிலைய குற்ற வழக்கு எண். 820-2020 ன் வழக்கு உள்ளது என்றால் சரிதான்.

5. நானும் எனது கணவரும், மச்சாண்டார் ஆகியோர் சேர்ந்து ஏற்கனவே எதிரிகள் மீது இருந்த முன்விரோத்தின் காரணமாக ஆயுத்ததை கொண்டு எதிரிகளை தாக்க முற்பட்ட போது நானும் எதிரிகளும் உறவினர்கள் என்பதால் அப்போது தள்ளுமுள்ளு ஏற்பட்டத்தில் எங்களுக்குள் தாக்குதல் நடத்தி கொண்ட போது தவறுதலாக தாங்களுக்குள்ளே தாக்கி கொண்டு காயம் ஏற்படுத்திகொண்டீர்கள் என்றால் இல்லை. மேலும், எதிரிகளை அயுதம் கொண்டு கடுமையாக தாக்கி எதிரிகளுக்கு வெட்டுகாயம் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகச்சை பெற்று அது குறித்தான காவல் துறையினர் விசாரணைபடி வழக்கு பதியபட்டுள்ளது என்றால் பொய் வழக்காகும்.

மறுவிசாரணை இல்லை.

ஓம்/- தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 344/2023**

**Prosecution witness : அ.சா.9** **Date : 13.06.2024**

| | |
|---|---|
| **Name : சின்னகுழந்தை** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 1, 2, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் காமனேரி குடியிருந்து டீ கடை வைத்து நடத்தி வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1,2,3 எனக்கு தெரியாது. கடந்த 2020ம் வருடம் காலை நேரத்தில் ஏதோ சண்டை நடந்ததாக சொன்னார்கள். வேறொன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 06.09.2020ம் தேதி காலை 10.00 மணிக்கு கந்தசாமி வீட்டில் இருந்தபோது எதிரிகள் அத்து மீறி வீட்டிற்குள் நுழைந்தார்களா என்றால் தெரியாது. பிறகு கெட்டவார்த்தையால் பேசி ஏன் பிளாஸ்டிக் பைப்பை உடைத்தாய் என்று வேல்முருகன் கையில் வைத்திருந்த கத்தியால் தலையில் வலது பக்கத்தில் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி மோகனகண்ணன் கொத்துக்கம்பியால் முதுகு மண்டையில் அடித்து

காயத்தை ஏற்படுத்தினார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி மகேந்திரன் கையில் வைத்திருந்த கத்தியால் தலையின் இடது பக்கம் வெட்டினார் என்றால் எனக்கு தெரியாது. இதை தடுக்க வந்த சாந்தியை எதிரி மணி என்பவர் கட்டையால் வலது தொடையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றால் இல்லை. சத்தம் கேட்டு வந்த சுதாகர் என்பவரை மணி கட்டையால் தலையில் அடித்து காயம் ஏற்படுத்தினார் என்றால் இல்லை.

3). எதிரி மோகனகண்ணன் கெண்டைகையில் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றால் இல்லை. மணி என்பவர் கையில் வைத்திருந்த கட்டையால் சுதாகர் என்பவரை முழங்கையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார் என்றால் தெரியாது. எதிரி மகேந்திரன் கையில் வைத்திருந்த கட்டையால் சுதாகரின் இடது கால் முட்டியில் எலும்பு முறிவு ஏற்படுத்தினார் என்றால் தெரியாது. தடுக்க வந்த பெரியாகாவை சுலோச்சனா கட்டையால் அடித்து காது மீது காயத்தை ஏற்படுத்தினார் என்றால் தெரியாது. எதிரி கோவிந்தன் கையில் வைத்திருந்த கட்டையால் இடது முன்னங்கையில் எலும்பு முறிவு ஏற்படுத்தினார் என்றால் தெரியாது. செல்வி என்பவர் மகேந்திரன் கையில் வைத்திருந்த கடப்பாரையால் கெண்டங்கையில் வீக்ககாயத்தை ஏற்படுத்தினார் என்றால் தெரியாது. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.